## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.6/2024

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 18.11.2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் (PW–1) | வயது | : | 66/2025 |
| த/க பெயர் | : | திரு. சோமு | தொழில் | : | – |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே சந்து பிரச்சனை என்றால் சரிதான். சந்து பகுதியானது பத்திரப்படி எனக்கு சொந்தமானதை பிரதிவாதி வைத்துக் கொண்டு என்னை அனுபவம் செய்யவிடாமல் தடுப்பதால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பத்திரப்படி எனக்கு உரிமையுள்ள சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்யாமல் நான் அனுபவம் செய்வதற்கு எந்தவித இடையூறும் பிரதிவாதிகள் செய்யாமல் சொத்தை என்வசம் எடுத்து கொடுக்கவேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2) எவ்வளவு காலமாக பிரதிவாதி சந்கு பகுதியை வைத்து கொண்டு என்னிடம் தராமல் பிரச்சனை செய்து வருகிறார் என்றால் கடந்த 23 ஆண்டுகளாக பிரச்சனை செய்து வருகிறார். பிரதிவாதி அந்த இடத்தில எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறார் என்றால் 25 வருடங்களாக குடியிருந்து வருகிறார். அந்த இடம் பிரதிவாதிக்கு சொந்தம் இல்லை என்றும் பாய்க்கு சொந்தமான இடம் என்றால் எனக்கு சொந்தமான இடத்தை மட்டும் கொடுத்தால் போதும், பாய்க்கு சொந்தமான இடத்தை அவரே வைத்துகொள்ளலாம். தாவா சொத்தில் உள்ள சந்து பகுதியை பிரதிவாதி வைத்துக்கொண்டு பிரச்சனை செய்கிறாரா என்றால் ஆமாம்.
3) நான் கிரயம் வாங்கிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் சந்து பகுதிகை குறிப்பிட்டு கிரயம் வாங்கினேனா என்றால் வாங்கினேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சந்து பகுதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. எனது வழக்குரையில் சந்து பகுதியை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எத்தனை சதுரடி கிரயம் வாங்கினேன் என்றால் 957 சதுரடி கிரயம் வாங்கினேன். எனக்கு சந்து பகுதி இருப்பது எப்போது தெரியவந்தது என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே தெரியவந்தது.

4) தாவா சொத்து ஆதியில் உம்மா சல்மா பீவிக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். உம்மா சல்மா பீவியின் வாரிசுதாரர் ரஹ்மத்துல்லா என்பதற்கு எந்தவித ஆவணத்தையும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கவில்லை என்றால் சரியல்ல. ரஹ்மத்துல்லாவிற்கு தாவா சொத்தை விற்பனை செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. ரஹ்மத்துல்லாவிற்கு வாரிசுமுறையில் தாவா சொத்து கிடைக்கப்பெற்றது என்பதற்கு வாரிசு சான்று இணைக்கவில்லை என்றால் சரிதான்.

5) செல்லையனுக்கு எதிராக ரஹ்மத்துல்லா மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார். மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ரஹ்மத்துல்லாவிற்கு சொத்து எழுதி வைப்பதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சந்து பகுதியானது நீளம், அகலம் எவ்வளவு என்றால் 2 ¼ அடி அகலமும், ½ அடி நீளமும் உள்ளது. எனது சொத்துக்கு எந்த பகுதியில் 1ம் பிரதிவாதி உள்ளார் என்றால் வடபுறம் உள்ளார்.

6) வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தின் நான்கெல்லையில் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ள விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து பெற வேண்டும் என்றால் வசப்பரிகாரம் வேண்டி தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டுமே தவிர விளம்புகை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது சாட்சியப்படி தாவா சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார்கள் என்பதுதான் என்றால் சரிதான்.

7) எனக்கும் பிரதிவாதிக்கும் புழங்கிக்கொள்ளும் பகுதிதான் அந்த சந்து பகுதியானது என்றால் சரியல்ல. மேற்படி அந்த சந்து பகுதியை நான் அடைக்க சென்றதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த பிரச்சனை எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எவ்வளவு நாட்களாக உள்ளது என்றால் 23 வருடங்களாக உள்ளது. பிரதிவாதி அனுபவத்தில் உள்ள

பகுதியை அடைக்க எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொத்தின் அனுபவம் தான் உள்ளது, வாங்கிய உரிமை இல்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். நான் கோருகின்ற பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் நான் குடியிருந்து வரும் வீட்டிற்கான ஆவணங்கள் என்றால் சந்து உட்பட உள்ள வீட்டிற்கான ஆவணங்கள். இந்த வழக்கானது 1ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 17:03:31 +0530

District Munsif
Mannargudi.